# ஆதி மார்க்க னீதி மொழி

July 2023

இதழ் 24 – ஜூலை மாதம் 2023 வெளியீடு
© AMNA Trust, Chennai



**மூலமந்நிரம்**

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்நோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

**பாத பூஜை**

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்நளுக்கே னமஸ்காரம்.

**மகாசங்நல்ப மந்நிரம்**

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் நோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்நாலங்நளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்நள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்நள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே, எதார்த்த நன்மன சற்சன மக்களே, இந்த ஆதி மார்க்க னீதி அவையின் மின்னணு சஞ்சிகை வருங்கால உலக மக்களுக்கு ஒரு ஒளியாக நின்று விளங்கப் போவது சத்தியமே. சர்வ ரகசியங்களும் உள்ளடக்கிய ஏகாட்சரத்தின் ரகசியங்கள் குறித்து பிரம்ம பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய வேத வேதாந்தங்கள், மற்றும் வந்த பெரியோர்கள் அருளிய பாடல்கள் சுலோகங்கள் இவற்றிலிருந்து, குமார் - யோவான் சுவிசேஷமாக அருளியதன் உண்மைப் பொருளையும், தியாகராஜன் - அழகணி சித்தரின் பாடல் சிறப்புகளையும், வெங்கடேச முத்து - வள்ளுவர் அருளிய திருக்கொரலின் உண்மை விளக்கங்கள் பற்றியும், கோபிநாத் - பகவத்கீதையில் பகவான் அருளிய ஏகாட்சர நாயகனின் சிறப்பு யோக செயல் நிலைகள் பற்றியும், மேலும் மனிதனன்றி வேறு எந்த ஜீவபேதங்களிலும் இல்லாத பரிணாம வளர்ச்சி பற்றி அகப்புற சான்றுகளுடனும், ஜீவிதா - கைலாய கம்பளி சட்டை நாயனார் அருளிய முன் ஞானம் பற்றியும், அவரவரும் தாங்கள் பெற்ற மெய் ஞான அனுபவ நிலைகளுடன் அறிவின் திறன் கொண்டு வேதசாட்சியுடன், மிகவும் சிறப்பாக தொகுத்து வழங்கியுள்ளதை தாங்கி உங்கள் கைகளில் தவழ்வதே இந்த மின்னணு சஞ்சிகை. மேலும் சத்துவாச்சாரி, சிவகாசி அவைகளில் பகிரப் பெற்றுள்ள ஏகாட்சர நாயகனின் தன்மை, சிறப்பு பற்றியும், இசை வகுப்பின் மூலமாக லாவண்யா வாசுதேவன் மெய்ஞானப் பாடலினை ராக-தாளத்துடன், மெய்உணர்வுடன், பாடுவதற்கான இசைப் பயிற்சியின் சிறப்பையும், ஒவ்வொரு மாதத்தின் சிறப்பையும், சிறப்புடன் தாங்கி மிளிர்ந்து கொண்டிருக்கும் இந்த ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகையை அனைவரும் பார்த்து படித்து பயன்பெற வேண்டும் என்ற மேலான நோக்கமுடன் வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

**சாலை ரவி**

**நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை**



Copyright © AMNA Trust, Chennai 

*வயிற்றுக்கு உணவு அருந்த வாய் இருக்கிறது. வயிற்றில் உண்டான எரிச்சலை னீக்கவேண்டி உட்கொள்ளும் மருந்தை வாங்கிக் கொள்ளவும் அதே வாய்தான் இருக்கிறது. அதே போல் மனத்திற்கு னல்ல உணவோ அல்லது கெட்ட உணவோ தர, கண்ணுங்காதும் இருக்கின்றன. அவைகளின் வழியாகத் தாறுமாறாகத் தின்று மனமாகிய வயிறு கோளாறு அடைந்திருக்கிறது. மனதில் அழுக்கடைந்து ஒரு எரிச்சலும் உண்டாயிருக்கிறது. அதோடு அதற்குக் கிடைக்கின்ற உணவோ அந்த எரிச்சலை அதிகப்படுத்துவதாயிருக்கிறது. வைத்தியர்கள் கிடைக்கிறார்கள். அவர்கள் அந்த மனத்தை தாறுமாறாகச் சிகிச்சை செய்துகொலை பண்ணுகிறார்கள். அந்த எரிச்சலை போக்கி, காலா காலத்தில் னல்ல உணவு தந்து, மந்நம் உண்டாகாமல் மனத்தைப் போஷித்து, ஒழுங்காக வளர்த்து, அதைப் பிரம்மமாக ஆக்கவே னம் வைத்தியசாலை இருக்கிறது.*

*~ சாலை ஆண்டவர்கள்*



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2023 ஜூன் மாத அவை நிகழ்வுகள் – 2023 ஜூலை மாத வெளியீடு

**01-06-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. குமரேசன்**

**ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி** என்ற பாடலுடன் அவை மலர்ந்தது.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 114:** ஊண் உறக்கமற்ற அரூபத்திலிருக்கும் ஈசன் போல் மனித சட்டையில் னீதி ரூபமுடன் வந்துள்ள திருவுருவும் கடவுள் தான். எமனை தன் கையகத்தடக்கி வைத்துள்ள அத்திருமேனி ஆதியே தான்.

**குருபிரான் அருளமுதம்:**
மெய்க்குரு பிரான் தன்னை நம்பி வந்தவர்களுக்கு வேதசாட்சியாக மரணமிலாப் பெருவாழ்வை செயலாக்கி வைக்கிறார்கள். பத்து அடையாளமுடன் பரிசுத்த ஜீவ பிரயாணம் என்பது உடலழியும் முன் உயிருள்ளபோதே பழகித் தேறும் விஷயமாக உள்ளது.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல் - அதிகாரம் எண் 4: அறன் வலியுறுத்தல்** எமனிடமிருந்து பாதுகாப்பதுவே வள்ளுவர் கூறும் அறன். அது ஆசானின் வாய்மையெனும் வேதமாக பாதுகாப்பான அரண்மனையாக உள்ளது. அறிவின் வழியில் ஒழுகுவதே அறமெனும் அரணாக மனத்துக்கண் மாசற்று இருப்பதாகும். ஆசான் அருளால் அமானிதத்தின் நிலையறிந்து அகமியத்தில் அறம் வலம் வரும் செயலே வள்ளுவர் கூறும் அறன் வலியுறுத்தல்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகணி சித்தர் பாடல் பாடல் எண் 17: தங்காயம் தோன்றாமல் சாண்கலக் கொல்லைகட்டி…** எண்சாண் உடம்புக்கு பிரதானமான சிரசில் தன்னெனும் ஜீவ குகையில் தன் காயமாக சூக்குமமாக, தங்க உடலாக இருக்கும் ஜீவன் ஒன்பது வாசல் வழி வீணாவது அறியாமல், அற்ப வாழ்வே சதமென நம்பி பிறவிச் சுழலில் சிக்குகிறோம். அதிலிருந்து மீள வள்ளலார் அருளியுள்ள நாத மருந்தான சாகாக்கல்வியும், மரணமிலாப் பெருவாழ்வும் இன்று ஆதி மார்க்க னீதி அவையின் செயலாக உள்ளது.

**தெய்வத் தேடு கூடகம்: குருபிரான் அருளமுதம்:**
குரமாது கூறிய படி குடதிசையெனும் மேற்கு முகமாக நின்று தேவ தக்ஷிணை தேவ தியானம் செய்து **ஆ-மனு** என்ற னாமம் பிரம்மகூடகர்கள் கூறுகிறார்கள். அவ் வாக்கினைக் கூற வல்லவர்கள் **ஆ-மனு** என்ற அடி, முடி, நடுவும் தேவதியானமும் கண்ட தேவர்களே. அவர்களே தேவாதி தேவனாகிய மனு மகனை தேடி வருகிறார்கள் என அருளி குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**04-06-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமாபதி வெங்கட்**

**ஏட்டினி லிருந்து பேசும்**
**இருந்நவ மந்திர முன்**
**கூட்டினில் னிஜம தாக்கிக்**
**கோதறக் கண்டா யானால்**
**வீட்டுடை விபர மெல்லாம்**
**விளங்கிடும் மெய்யன் பாலே**
**பாட்டையி லில்லா தோர்க்கு**
**பசுந்நிரை கிழிந்நிடாதே**

என்ற சாலை ஆண்டவர்களின் திருப்பாடலுடன் அவை மலர்ந்தது.


Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் கௌதம்:* கோவில்களில் இறைவனுக்கு அலங்கார அபிஷேக நேரங்களில் திரையிடுவது வழக்கம். திரை விலகிய பின்பே இறை தரிசனம் கிட்டும். அதுபோல் மனிதனிடம் அறியாமை எனும் அகங்கார மாயத்திரை, அறிவெனும் இறைவனை அறிய விடாமல் கருப்பு, நீலம், பச்சை, சிவப்பு, பொன்மை, வெண்மை, கலப்பு திரைகளாகவும் அவற்றிற்குரிய சக்திகளாக மாயசத்தி, கிரியாசத்தி, பராசத்தி, இச்சாசத்தி, ஞானசத்தி, ஆதிசத்தி, சிற்சத்திகளுமாக உள்ளன. இறைவன் இருக்கும் அந்நாடு சென்று வரும் ஆசான் அருளே நம் அறியாமை அகற்றி கடைத்தேறச் செய்கிறது.

**குருபிரான் அருளமுதம்:**
இராமாயண இதிகாசத்தில் சூர்ப்பனகை மூக்கு அறுபட்ட நிகழ்வென்பது ஒரு பரிபாஷையாகும். இதன் ரகசியத்தை மெய்வழி ஆண்டவர்கள் **ஜோதியென்ற னாசிமுனை பாழ் போகாது** எனவும் **னாசி வெளியே மூச்சு ஓடாத் தவத்தாலே** எனவும் அருளியுள்ளார்கள். ஈஸ்வர பட்டம் பெற்ற இராவணனின் பத்து தலைகளும் கலைகளின் உண்மை உணர்த்த வந்நவை. வாலியை இராமபிரான் மறைந்து இருந்து வதம் செய்ததும் ஆசான் அருளால் அறிவு கொண்டு பார்க்க வேண்டிய விஷயமாகும். னித்திய பரம் பொருளாகிய ஆன்மாவின் சிறப்பும், மனம் பிரம்மம் மற்றும் சைத்தான் ஆகும் நிலையும், பாவ புண்ணியம் இன்னதென்றும் உணர்த்தும் ஆசான் அவர்களே ஒவ்வொரு காலத்திலும் வெவ்வேறு ரூபம் தாங்கி வந்து மக்களின் வினை தீர்த்து பாவம் போக்கி பிறவிப்பிணி தீர்க்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* திரை விலகியே ஜோதி தரிசனம் என்பதனை வள்ளலார் அருளியுள்ளார். சப்தசாகர ரகசியமான எழுவகை திரைகள் கிழிவது ஆசான் அருளாலும் அவரவர் அனுபவத்தாலும் அறிவதாக உள்ளது. ஆசான் அருளிய இராஜபாட்டை எனும் ஒழுக்கத்தில் நடக்கும் போதே பசுந் திரையாகிய அகங்காரம் அழிகிறது. **கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்கு தக** என்ற வள்ளுவர் வாக்கின்படி மெய் ஆசான் அருளால் மெய்க் கல்வியை கசடாகிய குற்றம் அறுந்திடப் பழகி, அதில் நிலைத்து நிற்கும் வாழ்வே சொர்க்கபதி வாழ்வு என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

## 10-06-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்
### தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

**முடியாகிய மூமீனென வுளனாள் வீண்போக்கி...** எனும் ஞான முறையீடு பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

கலிமாப் பொருள் தன்னிலறிந்து மூமீனாக வாழும் நாட்களை வீண் போக்கிடாமல், இடியாக வரும் எமனின் கையில் சிக்கி அறியாமை எனும் கசப்பு வெளிப்படும் கயவர்களாகி விடாமல், இறைவனே தங்களின் பெருங்கருணைப் பேரருளால் அமானிதமாகிய அறிவை அடியேனுக்கும் அருள வேண்டுகிறேன்.

**கோடாயிதக் கூர் திருவாக்கியம்: எண்-130** மனிதனின் சூக்குமமாகிய சொந்த தேகத்தில், ரக்ஷிக்கிற 16 மற்றும் பக்ஷிக்கிற 9 அக்கினிகள் உள்ளன. ஜீவபதி அரசரின் உத்திரவின்றி, ஒருவன் தியானம் என அங்கு போனால் பக்ஷிக்கிற அக்கினியில் சுருண்டு போவான். பூரணமாகிய சோடசமெனும் 16 கலைகளை ஆசான் அருளால் தியானத்தில் பழகி வர ஜீவன் கண்டு ஜென்ம சாபல்யம் அடையலாம்.

*ஜீவசகோதரர் வெங்கடேசமுத்து:* **திருக்கொரல் - அதிகாரம் எண் 5: இல்வாழ்க்கை:** துணையுடன் வாழ்வதே இல்வாழ்க்கை. உடலுக்கான துணை அனித்தியமாகவும், உயிருக்கான துணை னித்தியமாகவும் உள்ளது. ஆசான் அருளால் மனம் அலைபாயாமல் பாதுகாக்கும் அறச்செயல் பழகி மெய்யறிவு பெற்று, ஐம்புலன்களால் விளையும் வினையறுத்து, அசைவற்ற சைவ நிலையான யோகநிலையில் ஜீவன் கண்டு தரிசித்தவர்கள் சிவயோக னித்திய வாழ்க்கை கைவரப் பெற்று தெய்வனிலை பெறுவர்.



Copyright © AMNA Trust, Chennai

*ஜீவசகோதரர் சங்கர்:* நீதிச் சொல் மணம் வீசும் இயல்மொழி அண்ணலாம் குருபிரானின் துணை கொண்டு வினையறுக்கும் செயல் பழகி நீதி னெறியில் னிலைக்கும் இல்வாழ்க்கை வாழலாம்.

*ஜீவசகோதரர் கோபி:* **ஶ்ரீமத் பகவத் கீதை - ஆத்ம ஸம்யமயோகம் (தியான யோகம்)** தியானம் என்பது அஷ்டாங்க யோகத்தின் ஏழாம் நிலை. குருபிரான் அருளிய முக்கோண சக்கரத்தில் சொன்னபடி ஆசனமிட்டு, மனம் அசைவற்ற சைவனிலையில் நாசிமுனை தியானம் சித்திக்கும். ஒழுக்க நெறியின் மூலம் ஒண்டி ஒரு மனமாகும் தன்னையறியும் தவமுறையில் தியானத்தில் துக்கவுடலை விட்டு சுகவுடலான சூக்குமத்தைக் கைப்பற்றினால் சமதிருஷ்டி எனும் சமநோக்குப் பார்வையும் சமரசமும் கைவரவாகிப் பிறவாநெறி பெறலாம்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தியானத்திற்கு மூலம் குருவின் திருவுருவாகிய வித்தில்லா வித்து எனும் நாதமாகும். இருள் நாசமாகும் இடமாகிய நாசி நுனியை மெய்குருவின் துணையுடன் அறிந்து, மனம் அசைவற்று ஆறறிவும் ஓர் அறிவாகும் ஒழுக்கத்துடன் கூடிய தியானத்தின் நிறைவு நிலை சமாதியாகும்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச் சட்டை நாயனார்: முன் ஞானம் - பாடல் எண்: 2** **தாங்கி நின்ற சரியையிலே நின்றுசடம் வீழில்...** சரியை-கிரியை-யோகம்-ஞானம் என்பவை சைவத்தின் நான்கு பாதமாகும். மெய்ஞானத்தின் அடிப்படை அஸ்திவாரம் சரியை ஒழுக்கமாகும். ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள படைப்பினுள் உயிரை அறியும் அறிவு மனிதன் ஒருவனுக்கே உள்ளது. மெய் ஆசான் உள்ளத்தில் சரி என தைத்து நம்மை சீடனாக ஏற்றுக் கொள்ளும் தருணமே **சரியை** முடியும் இடம். அரை நொடிக்குள் மலமகற்றும் தீட்சை பெற்று, மூலமந்திரத்தை பிரகாச ரூபமாகக் கண்டு தரிசிக்கும் செயலே **கிரியை**. குருபிரானின் திருஆலவாய் முன்பாக அஷ்டாங்கயோக செயல் பழகி அழியாப்பதியில் குடியேறி வாழ்வதே **யோகம்**. அஷ்டாங்க யோகச்செயல் பழகித் தேர்ந்து சமாதி எனும் சிவநிலை அடைவதே **ஞானம்**. பேரின்ப பெருவாழ்வளிக்கும் தலம் நான்கும், தேகம் நான்கும், புருஷார்த்தம் நான்கும் கைக்கொண்டவர்கள் மௌன தேசிகராக வரும் குருவின் அருளால் மௌன மாமணி மாடத்துள் ஏறி சிவமயப் பொருளை அடைகின்றனர்.

*ஜீவசகோதரர் சங்கர்:* **தெய்வத் தேடு கூடகம் எண்டிசையுங் ஙண்டறியா எந்நாய்பரை...** பத்து வயதான கன்னியான குண்டலித் தாயே சகலருக்கும் மெய்யமுது ஈந்த தாயாக, எண்டிசைக்கும் நான் என முன்னிற்கும் பஞ்சாட்சர ரூபியாக, கலியை சங்காரம் செய்யும் சத்தினியாக, சந்திரன் சூரியன் அற்ற அவ்வடிவான பதாம்பூரணியாக, ஓங்காரமான உணர்வெனும் கம்பத்தில் ஏற்றி உத்தி ஓ வண்ணமாக்கும் மகமாயித் தாயாக, நீதித் தீர்ப்பை நடத்தும் உத்தமியாகவும் உள்ளத்தில் வீற்றிருக்கிறாள். பேரின்பத்தை அளிக்கும் குருபிரானே மீன்கொடி கொண்ட பாண்டிராஜன். அவர்கள் நினைவெனும் பிரம்மத்திலிருந்து எழும் ஓசை கொண்ட நடனமே மனுவை ஈசன் ஆக்குகிறது. மும்மலம் விட்டு நிர்குண நிலையில் இருக்கும் குரமாதே குறியுரைத்து குறையறுக்கும் குரு அரசியாக வருகிறார் என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

> *தியானத்திற்கு மூலம் குருவடிவம். பூஜைக்கு மூலம் குருவின் திருவடிகள். மந்நிரத்திற்கு மூலம் குருவின் வாக்கியம். முத்திக்கு மூலம் குருவின் கிருபை.*
>
> ***~ குரு கீதை***

**11-06-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை**
**தொகுப்பு: ஶ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்**

ஆசின் மாமறை ஆதிபுராதனர் சாலை ஆண்டவர்களின் திருவடி போற்றி அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் கௌதம்:* அறிவை அறிந்த பின்புதான், வேதம் குறிக்கும் ஒரே பொருளை அறிந்து அடைவதுவே நாம் இவ்வுலகிற்கு வந்ததின் கடமை என அறியமுடியும். பஞ்ஞபூதங்கள்,



Copyright © AMNA Trust, Chennai 

சூரியன், சந்திரன் எனும் ஏழு பொருளையும் ஆளக்கூடிய எட்டாவது பொருளே ஆன்மா. அதுவே அகரமாக, எண்டிசைக்கும் னான் என முன்னிற்கும் பஞ்ஞாட்சரமாக உள்ளது. அதை அறிந்து அடைந்து, அதுவாகவே வாழும் குரு பெருமானே எண் குணத்தான்.

மனிதன் தன் குணத்தால் யார் என்பதை சிவானந்த போதமும் மற்றுமுள்ள வேதங்களும் கூறுகின்றன. முக்குணம் கொண்ட மனித தோற்றம் வினை மூலமாகவும், வினை மனதின் மூலமாகவும் உண்டாகிறது. அத்தகைய மனதை ஆசான் அருளால் அறிவாக மாற்றி, குணமற்று நிர்க்குணமாகும் துறவே, இறைவனை அடையும் வழியாகும். பஞ்ஞ பூத கலப்புடன் நாம் வாழும் வரை பூதாத்மா நிலையிலும், ஆசான் அருளால் அது கடந்து ஜீவேசப்பொருளை அறிகையில் ஜீவாத்மா நிலையையும் அடைகிறோம். நம்மிடத்திலுள்ள அல்லலுறும் ஒன்பது வாசல் கடந்து, இறைவன் இருக்கும் பத்தாவது வாசல் அறிந்து, எழுதா மறையான பஞ்ஞாட்சர பொருளில் குடியேற்றி, நவகோள்களின் பிடியிலிருந்து விடுபட்டு பிரம்மத்தை அடையச் செய்வது ஆதி புராதனராகிய ஆசானின் அருளே. மனம் புறத்தில் அலைவது பாவமாகவும், அதுவே அகம் திரும்பி அறிவாக மாறுவது தூங்காமல் தூங்கி சுகம் பெறும் புண்ணியமாகவும் உள்ளது.

*ஜீவசகோதரர் சங்கர்:* வினைகளுக்கு காரணமான மனதால் குணமும், தசாபுத்தியும் உண்டாகிறது. முக்குணங்களில் முப்பதி குடியிருப்பதை, சாலை ஆண்டவர்கள் **முப்ப திப்படி முக்குணத் திற்குடி, னிற்ப திப்படி னிர்க்குணா லங்விர்த ...** என ஆதி மான்மியத்தில் அருளியுள்ளர்கள். புற உலகில் நிலைத்துள்ள சந்திரனும் சூரியனும் பூமியின் சுழற்சியால் தோன்றி மறைவது போன்றே, நம் அகவுலகிலும் நிகழ்வதை ஆசான் அருளால் அறிந்து, நவகிரகங்களின் பிடியிலிருந்து விடுபட நமது நவ துவாரங்களையும் ஐம்புலக் கதவால் அடைப்பதே உபதேசம், அதுவே பேறறிவு. **ம்** எனும் அறையே மறையாக, இறைவனின் இருப்பிடமாக சர்வமும் ஒடுங்கும் இடமாக உள்ளது. நாம் மனமெனும் வீணரின் கையில் சிக்கி சிந்தை வீணாகாமல், தன் பெருவெளியான சாலை எனும் மெய்நிலத்தில், ஆமனுவாக வரும் ஆசான் அவர்களே குடியேற்றி வைக்கிறார்கள் என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவுற்றது.

**15-06-2023 ~ வியாழக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. பூர்ணிமா ஜீவானந்தம்**

சாலை ஆண்டவர்கள் அருளிய **பூமியின் பாரம் தீர்க்க புதுப்புது னாமம் பூண்டு** என்ற பாடலுடன் அவை உதயமானது. அவரவரிடமும் உள்ள நினைவு, ஆன்மா, இறைவன், அறிவு இவையாவும் உறு பொருளாகிய ஒரு பொருளே. மனிதன் புறத்தில் தேடும் நிம்மதி, தன் அகத்தில் இருப்பதை அறிய ஆசான் அருளே துணை. சதுர் யுகங்களும் கண்ட மெய்ம்மை எனும் செம்பொருளை அறியாது, யுகங்களின் ரகசியம் தன்னுள் இருப்பதும் தெரியாமல் மனதோடு சேர்ந்து வாழும் கலியனை மாற்ற வந்ததுவே தர்மயுகம்.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 114 (தொடர்ச்சி):** ஊண் உறக்கமற்ற தேவ ரூபத்தின் நாவே வேதநாவு, ஆதியின்நாவு, அருள்நாவு. அழியாத வரங்கள் அனைத்தும் நல்குவதும், சர்வத்தையும் நடத்துவதும் அதன் ஆணையே. அதுவே நீதி உருவுடன் உருமகால யுகதவம் முடித்து வரும் ஆதி. அதன் தரிசனையே வசந்த நேரம்.

**குருபிரான் அருளமுதம்:** வந்த வந்த பாரவான்கள் அருளிய மறை பொருளை மனுக்குலம் உய்யவென்று ஆண்டவர்கள் தங்கள் அமுத நாவு கொண்டு செவியில் சுவையுணர, செயலாக்கி வைத்தார்கள். ஊண் உறக்கமற்ற அத் திருமேனி அருளிய நிலையில் நின்று சாதிப்பதே தவம்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:* **திருக்கொரல்: அதிகாரம் எண் 6 - வாழ்க்கை துணைநலம்:** ஒரு மெய்குரு பிரானின் வாய்மையே அழிவற்ற நித்திய வாழ்விற்கான துணை நலமாகும். குருவருளால் தன்னை அறிந்து அகமியத்தில் ஆதி அந்தமற்ற பத்து வயதான கன்னியை அறிந்து வாழும் அக வாழ்வே மாண்புடைய பேரின்ப வாழ்வு. துவைத நிலையில் பெண்ணாக வாழும் நாம், அத்வைத நிலையில் வாழும் ஆணான ஒரு மெய்குருபிரானிடம் சரணடைந்து ஒழுக்கத்துடன் வாழும் கற்புடைய வாழ்வே உலக மாயையில் இருந்து நம்மை விடுவித்து எமன்


Copyright © AMNA Trust, Chennai

எல்லையில் வெற்றி பெறச் செய்யும். செந்தூரப்பொடி கொண்டு ஜெகத்தை மயக்கும் குருபிரானே நம் வாழ்க்கை துணைநலம்.



*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகணி சித்தர் பாடல் எண் 18**: **பற்றற்ற நீர் அதிலே பாசி படர்ந்தது போல்...** பிரம்மமாகிய மனமே, மாயையெனும் பாசி படர்ந்த நீராக மாறுகின்றது. மாயையின் மயக்கம் தீர்க்கும் சஞ்சீவியே ஆசானின் நாத மருந்து. ஜீவனாகிய சிவனை அறிவிக்கும் ஆசானின் நாதமே, நம் பாழ் மனதை, இறைவனின் தாள் சேர்க்கும் ஜீவ ஊற்றாகும்.

**குருபிரான் அருளமுதம்:** யாரும் கட்ட முடியாத திருமாளிகையே நம் தேகம். அதனை இயக்கும் பஞ்சபூதங்களை ஆட்டுவிக்கும் திருச்சிற்றம்பலப் பொருளை அறியும் ஆற்றல் உள்ளவன் மனிதன் ஒருவனே. அனித்திய சுகம் நாடும் மனதை விட்டு, நித்திய சுகம் நாட, நினைவில் சூடு ஏற்றும் மெய் வணக்கமே பிரம்ம வித்தை.

**தெய்வத்தேடு கூடகம் - குருபிரான் அருளமுதம்:**

ஆதி அந்தமற்ற முக்தி தரும் நடுவாக விளங்கும் தாயே, அடி முடி காண்பதற்கான துணை. தான் ஈன்ற பிள்ளைகளின் அறிவுப்பசி தீர்த்து பிறவிப்பிணி தீர்க்க ஞானப் பாலூட்டும் தாயே, கண்ணம்மா. நாமத்தின் இருப்பிடமான இல்லறத்தை மீம் எனும் அகர முதற் பொருளை அறிவிக்கும் இறை தூதரே ஜிப்ரேல். எல்லைகளுக்கு உட்பட்ட புலன்களின் தலைவனான எல்லையற்ற மனமே, ஆசான் அருளால் மெய்யுணர்வு பெற்று அறிவாக மாறி அகம் நோக்குகிறது.

விந்து நாதமும் கலந்து விளங்கும் அடி-முடி-நடுவே **ஆமனு** என்ற ஈசனாகும். புள்ளியேறு கணித மைச்சிமிட்டு கண் கணக்கு அமானிதத்தின் ரகசியமாக உள்ளது. ஆமன் எனும் வித்திலிருந்து விளையும் பஞ்சாட்சரமே ரவி கோடி வீசும் இருதய மலராகும். காயாபுரி எனும் காயத்துள் இருக்கும் அழியாத வஜ்ரகாயமே ஆகாயமெனும் பஞ்சகோச உடல்களாக உள்ளது. ஜீவ சிவ தாரகா என்பது காலங் கடந்த ஜீவனின் ரகசியமாக உள்ளது. சின்மறையை வெளிப்படுத்த வந்ததுவே மும்மூலத்தால் உண்டான தேகம். தேவ ரகசியம் தேர்ந்து ஐம்புல னுகர்வில் நிறை பிரணவம் தோன்ற விளங்குவது பிரம்மகூடகர்களின் செந்தூரமெனும் சிரசாகிய சாகாத்தலை. அவர்களின் பளிங்கி போன்ற முகராசி கண்டு தேவலட்சண, தேவரகசியப் பொருளான ஆசின் மறையின் குறியைக் கூறுகிறார் குரமாது. குறி கூறும் கலைவாணி குடியிருக்கும் ஆதியின் னாவே வஜ்ர காயமாக விளங்குகிறது. முருகப்பெருமான், சிவபெருமானின் நெற்றிக்கண் மூலம் தலைவழி பிறந்த தேவரகசியம் அறிந்தவர்களே ஆயிரத்தெட்டு அண்டம் அறிந்தவர்கள் என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**17-06-2023 ~ சனிக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்**

**செல்வச் சீர் னபியை அந்நர்மா முகமாய்த் தெரிசனை காண்பதும் திடனே...**
என்ற குருமணி மாலை பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

*ஜீவசகோதரர் சங்கர்:* மணப் பெண்ணுக்கு பெற்றோர் தரும் சீதனம் போல், உலகத் தந்தையாகிய இறைவன் மானிடர்க்கு தந்த தனிச் சீதனமே அமானிதம். அதனை இறை சன்னதங்களுடன் னினைவூட்ட வரும் செல்வ சீர் னபியை அந்தர் மாமுகமாய் தரிசனை கண்டவர்கள் ஜென்ம சாபல்யமும், மாறாக அவரின் வாய்மையை சந்தேகித்தவர்கள் பெருநோயாகிய பிறவிப் பிணியில் சிக்கி துன்புறுவதையே ஆண்டவர்கள் இத்திருப்பாடலின் மூலம் அருளியுள்ளார்கள்.



Copyright © AMNA Trust, Chennai 

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் வாக்கியம் எண் 131 : வர்ணாசிரம தர்மம்:**

1. *சூத்திரன்* - மெய்ஞ்ஞான இச்சையின்றி மெய்க் குருவைத் தேடாது பொய் வழிபாட்டு னரனாக வாழ்பவன்.
2. *வைஸ்யன்* - மெய்ஞ்ஞான இச்சையுடன் ஒரு சற்குருவின் சன்னிதி தேடி அடைந்து, ஆசான் அருளால் மாயத் திரைகள் சூழ்ந்த மனமெனும் கடல் கடந்து, திரவியமாகிய மெய்பொருளை தேடி அடைபவன்.
3. *சத்திரியன்* - ஞானப்பதம் பெற ஞானாசரியர் உரைத்த ஒழுக்க னெறியில் வைராக்கிய சித்தனாக னிற்பவன்.
4. *பிராம்மணன்* - அங்ஙமதிடத்தில் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவை பிரம்மோபதேசமாக பெற்றவன்.

*ஜீவசகோதரர் விஜயகுமார் :* **பரிசுத்த வேதாகமம் - யோவான் சுவிசேஷம் : அதிகாரம் 7**

**திருவசனம்: 12**
*இயேசு ஜனங்களை னோக்கி, னானே உலகிற்கு ஒளி. என்னைத் தொடர்பவன் இருளில் னடவாமல் ஜீவ ஒளியை அடைந்திருப்பான்* என்றார். ஜீவ ஒளியாகிய **னான்** எனும் பிரகாசம் வந்ந பின்பே அக-புறக் கரணங்களும் செயல் பெறுகின்றதை ஆசான் அருளால் உணர்ந்தவன் அறியாமை எனும் இருள் நீங்கி ஜீவ ஒளியெனும் அறிவுப் பிரகாசம் அடைந்திருப்பான்.

**திருவசனம் : 14** *இயேசு அவர்களுக்கு பிரதியுத்தமாக, என்னை குறித்து னான் கொடுக்கும் சாட்சி உண்மையாய் இருக்கிறது. னான் எங்கிருந்து வந்தேன், வருகிறேன், போகிறேன் என்றும் அறியீர்கள்.* அசைவற்ற அனாதி அசைந்து ஆதியெனும் சாட்சியாக வருவதனை உணராதோர் **னான்** எனும் ஜீவன் முளைத்து வந்த, முளைத்து வரும், ஒடுங்கும் இடமும் அறிவதில்லை என உணர்த்துவதே இத்திருவசனம்.

**திருவசனம் : 29** *என்னை அனுப்பிய பிதாவுக்கு பிரியமானவற்றை னான் எப்போதும் செய்கிறபடியால் அவர் என்னை தனியே இருக்க விடவில்லை.* ஆசானின் வாய்மைக்குள் ஆன சீடர்கள், னினைவில் னீங்காது அத்வைத இறைநிலையில் வாழும் நிலையை உணர்த்துவதே இத்திருவசனம்.

*ஜீவசகோதரர் கோபி :* **ஸ்ரீமத் பகவத் கீதை - ஞான விஞ்ஞான யோகம் :** மெய்ஞானத்துள் விஞ்ஞானத்தை உணர்த்துவதே ஞான விஞ்ஞான யோகம். எட்டு வகைப் பொருளாலான அகரத்தை அறிவு வடிவாக வரும் ஆசான் அருளால் தான் அறிய முடியும். மயிலினது வர்ணம் முட்டையினுள்ளும், விருட்சம் வித்தினுள்ளும் விளங்குவது போல் அவரவரின் சிரசிலுள்ள ஜீவனின் இரகசியத்தை, வள்ளல் பிரான் அருளிய புருஷார்த்தம் நான்கினை, குருமுகமாக அறிந்து அடைய வேண்டும் என உணர்த்துவதே ஞான விஞ்ஞான யோகமாகும்.

**மனித பரிணாம வளர்ச்சி :** மாறாத மனிதனின் தோற்றம், வேதத்தின் கூற்றுக்கு மாறான டார்வின் தியரியை (Darwin's Theory) பொய்யாக்குகிறது. கற்கால மனிதன் மிருகத்தை ஒத்த வாழ்க்கை வாழ்ந்தான். நெருப்பின் பயன் கண்ட பின் உணவை சமைத்தும், உலோகங்களை உண்டாக்கியும் வாழ்ந்தான். பின்னர் சக்கரமும், வாகனமும் பல கருவிகளும் உண்டாக்கினான். இறைவனை அடைய அவன் தந்த அழியாப் பொருளாகிய அறிவெனும் மாணிக்கம் கொண்டு மனிதன் தன் அழிவுக்கான பொருட்களை உண்டாக்குகிறான் என்பதே பரிணாம வளர்ச்சியின் நிதர்சன உண்மையாகும்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச் சட்டை னாயனார்: முன் ஞானம் பாடல் எண் - 3 :**
**அறிந்திருந்த னான்கிற்கும் விக்கின முண்டாம் ...** மனிதனின் புலன்கள் நான்கிற்குள் வேதம் அடக்கம் என்ற ஆண்டவர்கள் திருவாக்கின்படி, ஆசான் அருளால் தெளிந்த அறிவைப் பெறாத வரை புலன் நான்கிலும் னாய், வண்டு, விஷப்பாம்பு, ஈ, இவைகளே உள்ளன. ஆசான் அருளால் அகக்கண் திறந்தபின், அழிவுக்குரிய புலன்கள் அழியாமைக்கு மாறுகிறது. நம் பிறப்புக்கு காரணமான, மும்மூலமெனும் மூவினைகளை வெல்லும் உபாயத்தை முக்காலம் கண்ட ஞானிகளே நமக்கருளி, நம் கர்மத்தை அகர்மமாக மாற்றுகிறார்கள். அழிவு தரும்



Copyright © AMNA Trust, Chennai

மூவாசைக்கு காரணமான, மாயையாகிய மனதின் கீழான எண்ணத்தில் சிக்கியவர் சேற்றில் ஈ உழல்வது போல பிறவிச் சுழலில் சிக்குவர் என்பதையே சட்டைநாதர் இப்பாடல் மூலம் அருளியுள்ளார்.

**குருபிரான் அருளமுதம்:** ஜீவன் குடியேறியதின் அடையாளம் மூச்சும் சப்தமும் என்ற ஆண்டவர்களின் வாக்கானது, தூல மற்றும் தேவப் பிறப்பின் இரகசியமாக உள்ளது. ஜீவனாக அடைந்துள்ள ஜீவ ஆவியாகிய மூச்சு வீணாகி வயது வாழ்நாள் குறைவதை, குருபிரான் பேரிரக்கத்தால் வீணாகாமல் காக்கும் உளவறிந்து, ஜீவனின் போக்குவரத்தாகிய தொனியை மெய்ச் செயலில் அதிகம் செலவு செய்பவர்கள் ஜீவன் முத்தராகிறார்கள் என்ற ஒலிவாயுரையுடன் ஆசான் அவையை னிறைவு செய்தார்கள்.

### 18-06-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சத்துவாச்சாரி சபை
### தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

*ஜீவசகோதரர் கௌதம்:* மானிட ஜென்மம் எடுத்தும் ஆறாவது அறிவை அறியாமல் ஐயறிவு நுகர்ச்சியில் வாழும் னரனை ஆசான் தன் வாளாயுதத்தால் முறைசங்கார அனுக்கிரகம் செய்து மறுபிறப்பில் மனுவாக்கி, தேவனாக்கி னித்திய பேரின்ப வாழ்வில் ஏற்றி வைக்கிறார்கள். ஆறு பிறப்பில் வந்த மனு என்பவன் குருவருளால் தேவப் பிறப்பாகிய ஏழாவது பிறவி எடுக்கும் போதே இறைவனிடம் வாங்கி வந்த அமானிதக் கடனை அடைக்க ஏதுவாகிறது. நம் அறிவுக்கோ னினைவுக்கோ எட்டாத இதற்கான உபாயத்தை அருளும் னடமாடும் பரமாத்மாவாக வருபவரே ஆசான்.

குழப்பமுற்ற மனமே தீய விளைவுகளை ஏற்படுத்துகிறது. ஒரு மெய்க் குருபிரானின் இரக்கத்தால்தான் நம் மனம் செம்மையாகி அறிவாக மாறுகிறது. சர்வத்திலும் நின்று ஆட்சி செய்யும் அகரப் பொருளில் நம்மை ஆக்கி வைப்பவர்களே ஞான செம்மல்கள். னாள்தோறும் புதியவனான இறைவன் ஒவ்வொரு மனுத் தலையினுள்ளும் அறிவாக ஜீவனாக அவரவரின் சொந்த தேகமாக நித்திய வைரமணி தேகமாக, நினைவாக நின்று விளங்குகிறான் என்பதை காலம் கடந்து வாழும் தீர்க்கதரிசியர் வந்து அருளிய பின்னரே நாம் அறிய முடிகிறது. மனமெனும் பேய்க்கு அடிமையாக இருக்கும் நம் அறிவை ஒரு மெய்க்குரு பிரான் தன் னாத ஒலியால் மீட்டு சீராக்கி தானிருக்கும் மாசற்ற பிரம்ம நிலையில் சேர்க்கிறார்கள். எமனணுகா சாவா வரத்தை இமாமாக வந்து, இனாமாக நமக்கும் அருளுகின்ற குருபரன் அவர்களே நாம் பெற்ற பெறுதற்கரிய பெரும் பரிசு என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

### 18-06-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை
### தொகுப்பு: ஸ்ரீமதி. பானுமதி குமரேசன்

**குருபிரான் அருளமுதம்:**

> **னேருரைதம் பிஸ்மில்லா ஹிர் ரஹ்மா னோடும்**
> **னிர்ரஹீமென் றிலங்கும்பரி பூரணமிங் னுரைக்க...**

பரிபூரணத்தில் இருந்து வெளிவந்ததே பூரணம். சர்வ வல்லமையுடன் னாம ரூபமற்று, சர்வத்தையும் படைத்து, காத்து, அழிக்கும் வஸ்துவே இறைபொருள். ஜீவன் குடியேறியதன் அடையாளமான தொனி உண்டாகும் இடத்தை அறிவதே தன்னை அறிதல்.

*ஜீவசகோதரர் மகேஷ்:* னித்திய இறை பொருளையும், உதயமாகும் பூரணப் பொருளையும், சத்தாக விளங்கும் சிவநிலையையும் ஒன்றாக்கி, தென்னாடுடைய சிவனாக வந்து, சாலை ஆண்டவர்கள் அருளியதே ஆதி மெய் உதய பூரண வேதாந்தம். அறியாமை அகன்று அறிவு வழி வாழ்வதே மெய்வழி. ஜீவ வாழ்க்கையை திடம்படச் செய்திட வள்ளலார் அருளிய நான்கு


Copyright © AMNA Trust, Chennai

ஒழுக்க நிலைகளும் உயிருக்கு மேலான ஒன்றாக உள்ளது. உணர்வற்ற நிலையில் தூங்குவது அறியாமையாகவும் குருவருளால் இறை வஸ்த்துவுடன் உணர்வுடன் கலந்து தூங்காமல் தூங்குவது அறிவு நிலையாகவும் உள்ளது. பூரணமாக விளங்கும் காரண தேகத்தை கவனமுடன் பதியாகிய இறைவனிடம் ஐக்கியமுறச் செய்வதே மெய் வணக்கமாகும்.

*ஜீவசகோதரி புன்னகை:* விதி எழுத்தை மதி எழுத்தாக்கி, எழுதாத எழுத்தறிவித்து, ஜீவன் கண்ட சென்மசாபல்ய குலத்தில் வாழ வைத்த குல குருவே சிவன் என்பது ஜீவசாட்சியாக சத்தியம் சத்தியம் சத்தியம். இச்செகத்து மனுமக்களுக்கு மெய்வழிச் சபையாரின் ஜீவப்பரிசாகிய வேத வேதாந்தங்களே தன்னை அறிந்த அன்பர்கள் சென்ற வழிக்கான சாட்சி. ஜீவ ஏற்றத்தின் நிலைகளையே ஒன்பது பருவங்களாக ஆதி மான்மியத்தில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் கவனமணி:* மனிதன் உடலால் செய்யும் அனைத்து வேலைகளும் சலித்து ஒய்வை நாடினாலும் ஒய்வும் சலிக்கிறது. ஒயா தொழுகையாக மக்காவில் நடைபெறும் இறை வணக்கத்தை பெரியோர்களின் அருளால், அகத்தில் இருதயத்தில் வீற்றிருக்கும் மறுவிலா குகனை அறிந்து வணங்குவதே நிஜமான ஒயாத்தொழுகையாக இருப்பதை உணர்கிறேன்.

*ஜீவசகோதரி வைஷ்ணவி:* ஓர் மெய்க்குருவின் துணையால் காலத்தின் இரகசியமறிந்து ஐம்புலனால் வீணாகும் வாழ்நாளை வீணாக்காமல் மரணத்தை வெல்லலாம். ஒரு நொடியில் இருந்து உண்டாகும் காலத்தின் அதிபதியான காலனால், அழியும் நம் வாழ்நாளை பிரம்மவித்தை செயல் கொண்டு மீட்டு பிறவாமையில் ஆக்குவது காலனுக்கு அதிபதியான காலாதீதனான குருபிரான் அவர்களே என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடனும் அவை நிறைவுற்றது.

> *ஸப்தஸாகர பரியந்நமுள்ள தீர்த்தங்ஙளின் ஸ்னானத்தா லுண்டாகும் பயன் யாதோ, அது குருவினது பாதோதகத் துளியின் ஆயிரத்தொரு கூறினால் உண்டாகின்றது.*
>
> ***~ குரு கீதை***

**22-06-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. புன்னகை மகேஷ்குமார்**

**குன்றாத பேரருளின் மணியே உந்தன்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. எதார்த்த னன்மன மக்களின் அறியாமைப் பூட்டு உடைய, பொன்றாத பூரணப் பொக்கிஷத்தின் பூட்டை தன் குமுத மலர்க்கர சாவி கொண்டு திறந்து அள்ளி குன்றாத பேரருளால், எதார்த்த னன்மன மக்களின் அறியாமை அகற்றிடும் குருவே, தந்தையாகவும் தாயாகவும் இறைவனாகவும் திகழ்கிறார்கள்.

**வான்மதி கொரல் வாக்கியம் எண் 114 (தொடர்ச்சி):** பூரண சந்திரன் போல் அல்லாவை நேருக்கு நேர் காணலாம் என சர்வரே ஆலனபி அருளியதை னிச்சய னிரூபணையாக காண்பவர்கள் அனந்தாதி தேவர்கள். ஆகாரம் உண்பது மனதின் செயலும், அதை சத்தாக மாற்றுவது அறிவின் செயலும் ஆகும். ஊண் உறக்கமற்ற தெய்வத் திருமேனி சுருதிப் பிரானின் ஆதியின் னாவு, னீதியின் னாவு, வேத னாவிலிருந்து வரும் வரமாதி வரமே ஜீவனை ரட்சிக்கும்.

**குருபிரான் அருளமுதம்:**
நாம ரூபமற்ற அல்லா, ஈசன், பிதா, பரிசுத்த ஆவி, சிவம் என்பதை தன்னில் உணர்ந்து, அதுவாகவே ஆகி வரும் குருவின் நாதமே அல்லாவை நேருக்கு நேர் காணச் செய்யும் வல்லபம் கொண்டது. நம் னாவிலுள்ள பேதத்தை தன் வேத**னா** கொண்டு களைந்து நம்மை சிவமாக்கும் குருவே சிவன்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:* **திருக்கொரல் அதிகாரம் எண் 7 – மக்கட்பேறு.** புதல்வரைப் பெறுதல், மக்கட்பேறு என்பது பிள்ளைகளின் நற்செயலால் தந்தையின் மேன்மையைக் கூறுவது உலக வழக்கு. நரனை மறுபிறப்பால் மனுவாக்கி பொய்யகற்றி மெய்யிலாக்கி உலகினுக்கு ஒளி தரும் விளக்காக்கி வைக்கும் ஞானத்தந்தை, தன் ஞானப் புதல்வரால் பெறும்


Copyright © AMNA Trust, Chennai

சிறப்பை அருளிய வள்ளுவரின் பொய்யா மொழியை, ஆசானின் அருளால் வேதங்களின் பரிபாஷை அறிந்து மெய்யுணர்வைப் பெற்ற பின்பே அறியமுடியும்.

**குருபிரான் அருளமுதம்:**
குரு அருளால் குழந்தை குமாரனாக மாறுவதே **கு** மாரரான பருவம். அழியாத அகரத்தை அறிந்தவனே ஆரியன். இது ஆதி மார்க்க னீதி அவையின் மெய்ஞான ராஜபாட்டையில் நடந்து வரும் மக்களின் அனுபவ செயலாகும். ஞானத் தந்தையின் திருனாமத்தை அறிக்கை செய்யும் அருகதை உள்ள சீடனாகிய ஞான மகனின் சிறப்பையே வள்ளுவர் புதல்வரைப் பெறுதல் எனும் அதிகாரமாக அருளியுள்ளார்.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 19 : கற்றாரும் மற்றாரும் தொண்ணுூற்றோ டாறதிலே...** மெய்க் கல்வியை கற்றவரே கண்ணுடைய கற்றோர். அதனைக் கல்லாத மற்றாரையும் கற்றோர் ஆக்கும் குருவே உற்றார். நம் உடலின் 96 தத்துவங்கள் ஓயாது செய்யும் வேலையை வேடிக்கை பார்ப்பதே நிஷ்டை என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். கடத்துள் செயலாற்றும் கடவுளை குருபெருமான் அறிவிக்கும் போதே அறிய முடியும். குருவுக்கு மேலான தத்துவம் இல்லை என்கிறது **குருகீதை**. எமனின் பிடியிலிருந்து நம்மை காக்கும் வல்லபம் உள்ளவர் குரு ஒருவரே.

**குருபிரான் அருளமுதம்: தேவ ரகசியம் தேடு உன் உடம்புள்** என ஆண்டவர்கள் அருளியுள்ளபடி புராதனராக வரும் குருபரன் அருளால் பண்டு பழுத்த மறையின் தேவரகசியத்தை எதார்த்த னன் மனத்தினர் யாவரும் அவரவருள் அறியலாம்.

**தெய்வத் தேடுகூடகம்: குருபிரான் அருளமுதம்: னிறை பிரணவத்தின் மூலம் னின்றுங்கள் சிரசின்மேலே...** மறையின் முதலாக னிற்கும் மாணிக்கத் திலகமே எழுதாத எழுத்தாகும். போகாப்புனல் மேல் வீற்றிற்கும் பிரம்ம முடி சாகாத்தலையை அறிந்தவரே தேவன். கைலை பிரான் சன்னதி முன் கற்பகத்தரு நிழலில் சோகம் அற்று இருப்பவரே, அசோக னிழலின் மணம் கொண்டவர். இறவாமை பிறவாமையின் ரகசியம் அறிந்தவர்களே ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்கள். தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் குறி சொல்லும் வல்லபம் கொண்ட குரமாதின் வாய்மையை, அறிவை அறிந்தவரே அறிவர். நரனை மனுவாக தேவனாக மாற்றி பூமியின் பாரம் தீர்த்து தர்மயுகம் உண்டாக்க வந்தவரே மனுமகன். கலியனின் நாவில் இருக்கும் அகங்கார வடுவை மாற்றி வீண் மனுவை ஈசனாக்கும் ஜென்ம சாபல்ய செயலை அருள தேடி வந்தவரே சாமி என ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.
செங்கரத்து அரிவாளெனும் கூரோங்கிய அவ் வாளே, வரப்போகும் பெரும் அமளியிலிருந்து நம்மை மீட்கும் ஆயுதமாக உள்ளது. பாரவான்கள் வியந்து நோக்கும் னித்தியத்தை அருளும் பனிமதிமங்கை பங்கனின் வாக்கு அணுவும் பிசகாது. இருளறு மொழி கொண்டவர் குரு. மும்மலம் வென்றவர் யோகி. குரு சொன்ன உளவின் படி யோகிகள் ஆகும் செயலில் உசாருடன் தேற வேண்டும். ஆண்டவர்கள் அருளிய மெய்ஞானத்தை உலகில் பரவச் செய்யும் மேலான புண்ணியமும் தர்மமுமான செயலை மெய்யாக்குவதே நமது கடமை என அருளி தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.

**24-06-2023 ~ சனிக்கிழமை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்**

மாதவ மகரிஷி மார்க்க னாதப் பெருமானின் **ஓதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகி வளர்...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது. மாதவம் கொண்ட குருனாதரே தன்னை நாடிவந்த எதார்த்த நன்மன மக்களை தனது அசல் வாக்கால், நகல் வழிபாட்டை மாற்றி அசல் வழிகாட்டி, அசல் வணக்கத்தால், அசல் தெய்வம் இன்னதென உணர்த்தி அசலுக்குள் ஆக்கி வைக்கிறார்கள்.

**கோடாயிதக் கூர் திருவாக்கியம் எண் 132 :** மனிதன் இறக்கும் போது, அவனைப் படைத்த இந்திரியம் வெளியாகாமல் இருப்பதே சாவா வரமாகிய அடக்கம். அவனே சுவர்க்கலோக வித்து. கசப்பு ஜலமான மனதை ஆசானின் நாத மருந்தால் அறிவாக மாற்றி, இருக்கும் போதே



Copyright © AMNA Trust, Chennai 

அடக்கம் மடக்கிப் பிடிக்கத் தெரிந்த பிரம்மவித்தை அறிந்தவனே, சொர்க்க லோகத்துக்குரிய வித்தான சாவா வரம் பெற்றவன்.

*ஜீவசகோதரர் விஜயகுமார்:* **சத்திய வேதம்:** இயேசுபிரான் தனதருளால், குருடனின் கண்களைத் திறந்ததும், மரித்த லாசரஸ் என்பவனை கல்லறையிலிருந்து எழுப்பிய அதிசயம் பற்றிய **யோவான் சுவிசேஷம்: அதிகாரம் 11 (37 - 44)** அஞ்ஞானத்தால் குருடாக இருந்த ஒருவனின் அகக் கண்ணை **நானே மெய்யான ஒளி** எனக் காட்டி திறந்து வைத்தார். கல் மனமான கல்லறையில் கட்டுண்டு மரித்துக் கிடந்தவனை, இயேசு தனது சத்தத்தின் மூலம் **மாமிச இச்சை மரணம். ஆவிக்குரிய சிந்தனையே நித்திய ஜீவனும் சமாதானமுமாகும்** என்ற ஜீவனின் நிலை உணர்த்தி சாவிலிருந்து மீட்டு மறுபிறப்பளித்தார்.

**குருபிரான் அருளமுதம்:**
செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாகாத ஓரிடமாக அவரவரிடத்தில் விளங்கும் அறிவிருக்கும் தலத்தை அறிந்தவர்களே ஆதி மார்க்க நீதி அவையின் அங்கங்கள்.

*ஜீவசகோதரர் கோபி:* **ஸ்ரீமத் பகவத் கீதை - அக்ஷர பிரம்ம யோகம் :** அதி பூதஉடல், அதி தெய்வஉயிர், அதி யக்ஞஆன்மா அறிந்தவன், மெய்க்குருவின் துணையுடன் மரணத்தை வென்று பரமாத்ம நிலை பெறலாம். அவமாக ஓடும் சரம் அட்சரமாவதே, ஏகாட்சரமெனும் கங்குல் பகலற்ற பரமபதம் அடைவதற்கான வழியாகும்.

**குருபிரான் அருளமுதம்:** ஓரெழுத்தான திருவெனும் அட்சரத்தை ஒளி தேகத்தில் தரிசிக்க வைப்பதே அட்சரப்பியாசம். வேதம் ஓதி, ஓயாமல் படித்து மெய்யுணர்வு பெற்று சரம் அட்சரமாகும் செயலையே **ஜீவாத்மா-பரமாத்மா** ரகசியமாக ஆதி மான்மியத்தில் ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரி ஜீவிதா:* **கைலாய கம்பளிச்சட்டை நாயனார் - முன் ஞானம் பாடல் எண் 4: தியங்கினால் கெர்ச்சித்துத் துரத்துச் சண்ணுஞ்...** பொய்யும் மெய்யும் பிரித்துக் காட்டும் ஆசானின் பூம்பாதமே, நம் மாயையான மனதின் பற்றறுத்து, புலால் மேனியை வெறுத்து, நான்கு தேக ரகசியம் அறிந்து, அதனுள் படிப்படியாக ஏறும் அறச்செயல் பழக்கி, மனதைச் செம்மையாக்கி சைவத்திருமேனியில் குடியேற்றி வைக்கிறது.

*ஜீவசகோதரர் கோபி :* **பரிணாம வளர்ச்சி -** மனிதனின் உணவு-உடை-இருப்பிடம். ஆதியில் காய் கனிகளை பச்சையாக உண்டு, பின்னர் வேட்டையாடி மாமிசம், தானியம் இவற்றை நெருப்பில் சமைத்து அறுசுவையாக உண்ணும் அறிவும், மானம் எனும் நிலை உணர்ந்து, முதலில் இலை, தழை, விலங்கின் தோல், பின்னர் பருத்தி, பட்டு, செயற்கை நூலிழை மூலம் கைத்தறியால், இயந்திரத்தால் ஆடைகள் செய்து அணியும் அறிவும், காடுகளில் மரங்களில், குகைகளில் வாழ்ந்தவன் குடிசைவீடு, மரவீடு, ஓட்டுவீடு, கல்வீடு, அடுக்குமாடி வீடுகளில் வாழும் அறிவும் பெற்றான்.

**குருபிரான் அருளமுதம்:** பரிணாம வளர்ச்சியின் உண்மை அறியாமல் தளர்ச்சியான மரணப்பாதையில் அவசரமாகச் செல்வதை அறிவென எண்ணி அழிவுக்கான பலவித கேடுகளை உருவாக்குகிறான்.

*ஜீவசகோதரர் கௌதம் :* வள்ளல் பெருமான் அருளிய தென்திசையெனும் எண்சான் உடலுக்கு பிரதானமான தலையைக் கட்டிய சாகாத்தலை எனும் தெய்வத்தைத் தேடிக் கூடுவதற்கான அகமியப் பயணத்தை குருவருளால் அறிந்தவர்களே ஆதி மார்க்க நீதி அவை மக்கள்.

**குருபிரான் அருளமுதம்: தெய்வத் தேடுகூடகம் : அமுதஞ்ஞிந் நுந்நமிழே கமழுந்நென் றிசையதே குமரிவேங் நடத்திடை அமருந்நெய் வப்பதியே...** குரமாது குபீரென மறைந்தாலும் ஜோதியான குரவர் ஈன்ற வாணி வாக்கு, எக்காலமும் மறையாது ஒலித்துக் கொண்டே இருக்கிறது. தென்திசையின் கயிலாய அவுஷதத்தை உலகத்தவர் யாவரும் பெற்று பிறவிப்பிணி தீர்ந்து பிறவாமை பெற்று பெருவாழ்வு வாழ, பரிசுத்த ஆவி தெய்வத்தின் திருவடி போற்றி வணங்கி, தோத்திரப் பாடலுடன் குருபிரான் அவையை நிறைவு செய்தார்கள்.



Copyright © AMNA Trust, Chennai July 2023

**25-06-2023 ~ ஞாயிற்றுக்கிழமை ~ சிவகாசி சபை**
**தொகுப்பு: ஸ்ரீமதி. அருணா சுதர்சன்**

**அங்ஙம திடத்தி லைம்புலக் கதவை**
**யடைக்கும்பே ரறிவெனக் கருளி** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.

*ஜீவசகோதரர் ராஜேஷ்:* இறைவனை அறிய தடையாய் இருப்பது அறியாமை எனும் மாயை. அகத்திலுள்ள இறைவனை அறியாமல் புறத்தில் இறைவனைத் தேடும் அறியாமையாகிய மயக்கத்தில் உள்ளவர்களுக்கு உண்மை என்பது கசக்கும். ஒரு மெய் குருபிரானிடம் சரணடையும் போதே அறியாமை எனும் இருள் விலகி அறிவு பிரகாசிக்கும். ஆசானின் னாதமாகிய அறிவின் துணையுடன் அலையும் மனதினை அறிவாய் மாற்றி, மெய்ப் பொருளைக் கண்டு அழிவற்று வாழ்வதே வாழ்வு.

*ஜீவசகோதரர் கிரகதுரை:* மனிதனிடத்தில் நான் என்பதே வழியாகவும், சத்தியமாகவும், ஜீவனாகவும், வெளிச்சப் பொருளாகவும் உள்ளது. ஆகாய அம்சமாகிய சப்தத்தின் உள்ளிருக்கும் சதாசிவமெனும் சுத்த னினைவே ஆசானின் னாதமாகவும், ஜீவனெனும் சிரஞ்ஜீவிக்கான சஞ்ஜீவி எனும் அருமருந்தாகவும் உள்ளது. பண் என்பதும் பரம் என்பதும் ஆதம் பாதமாக உள்ளது. ஆசானின் அருளாகிய யுகாந்த நாட்டு செல்வமும், வாக்காகிய பொருளும் இல்லார்க்கு பரவுலகும், இகவுலகும் இல்லை. குரு என்பது செயலன்றி அவரின் தோற்றமல்ல. குருவின் அருளால் ஓதாமல் ஓதும் தவநிலை ரகசியம் பழகி நாமும் சிவமாய் வாழலாம்.

*ஜீவசகோதரர் பழனிகுமார்:* நம் சிரத்தில் உள்ள நித்திய ஜீவனை அமானிதம் எனும் சீர் கொண்டு அறிவதற்கு ஆசானின் அருள் ஒன்றே வழி. ஆசான் அவர்களே கண்டங் கடத்தி அப்பால் நம் சிரத்தில் வீற்றிருக்கும் அண்டர் பதியைத் தரிசிக்கச் செய்கிறார்கள். ஒரு மெய் ஆசானின் வாய்மைக்குள் ஆகுவதே மனுவின் தலையாய கடமை என்பதே வேதத்தீர்ப்பு. நம் வினை தீரும் போதே குருவின் அருள் பெற்று, அறம் செய்து, அகரப் பொருளை அறிய முடியும். ஆசானின் அருவுருவான வித்தில்லா வித்தே, ஈமான் எனும் பதினோரு காரியத்தை நாம் கைக் கொள்ளவும் பற்றற்ற பரம்பொருளை பற்றவும் துணை புரிகிறது. கொண்டல் வாய்மை கொண்டு கோடி சூர்யப்பிரகாச சைதன்யப் பொருளை கோதறக் கண்டு தரிசிப்பதே பிறவாமை பெறுவதற்கான வழியாகும்.

*ஜீவசகோதரர் பிரபு:* வந்த வேதமாகிய குருபிரானே, நரனை மனுவாக்கி, பாழ் மனதை அமானிதமெனும் அறிவு வடிவாக மாற்றி பிரம்மவித்தை கொண்டு தேவனாக மாற்றுகிறார்கள்.

*ஜீவசகோதரர் கணேஷ்வரன்:* வள்ளல் பெருமான் அருளிய ஒழுக்க நெறிகளையும் எண்சாண் உடலுக்கு பிரதானமான சிரசில் உள்ள மெய் ஞானத்தையும் ஆசான் அருளால் அறிவதே சமரச சுத்த சன்மார்க்க நிலையாகும்.

**குருபெருமான் அருளமுதம்:**
சாலை ஆண்டவர்களும் புத்தபகவானும் பல கடுமையான இன்னல்கள் சந்தர்ப்ப சூழ்நிலைகள் கடந்தே மெய்ஞானம் பெற்றுள்ளனர். ஆறறிவு அறிந்து மனிதனாகி **நான்** எனும் பிரகாச பொருளை தன்னில் அறிந்து, பிண்டம் புகுந்து இனி பிறவா நெறி பெறுவதற்கான ஆசானின் சொல்வாக்கான செல்வாக்கால் மெய்உணர்வு பெற்றவர்களே அனந்தாதி தேவர்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* பஞ்சாட்சரமாக விளங்கும் ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்தை அறிந்து அடைந்தவனே சாகாத சன்மார்க்கி. ஆசான் அருளால் ஆறறிவும் ஓரறிவாகி, மனம் செம்மையாகி உலக ஒட்டுவிட்டு, காலத்தை துறவு பூண்டு, ஆசான் அருளிய அழியாத தௌஹீது கொண்டு அறுசுவை ஒளிக்கும் இடம் அறிந்து இறவாமை மூலம் பிறவாமை பெற்றவரே அமரர் என்ற பகிர்தலுடனும் தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.



Copyright © AMNA Trust, Chennai July 2023

**29-06-2023 ~ வியாழக்கிழமை சபை ~ நாயகன் இல்லம்**
**தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்**

**குருபிரான் அருளமுதம்:**
இன்றைய நாள் **பக்ரீத் எனும் தியாகத் திருநாள்**. **பாடுபட்டேன் பலனெடுத்தேன் உனக்கும் சொன்னேன்** என மெய்வழி ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். மனதினை துறந்து மனுக்குலம் ஜென்ம சாபல்யம் பெறுவதற்காக தியாகம் செய்தவர்களே சர்வ மெய்ஞான மகத்துக்களும்.



**னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான் னமசிவ இருப்பறியான்** எனும் ஞான முறையிடு பாடலுடன் அவை மலர்ந்தது. உயிரை நம்பி வந்த உடல், மனதின் பிடியில் சிக்கி, ஒவ்வொரு சுவாசத்திலும் வாழ்நாளை வீணாக்கி மரணத்தை நோக்கி செல்கிறது. இதை அறியாத அறுசுவை நாட்டமுள்ள நரன், தன்னை தம்பிரான், தவசி, திகாம்பரன், சைவன் என்கிறான். சற்குரு பிரானாக வரும் தம்பிரானே மரணத்தின் பிடியிலிருந்து நம்மை மீட்பதற்கான காவற்பாடு அருளவல்லவர்.

**வான்மதிக் கொரல் வாக்கியம் எண் 115:** மெய்வழி ஆண்டவர்கள் தங்களின் தவ விளைவு ஏற்றத்தால் தங்கள் தூலத்திருமேனி ஊண் உறக்கமற்று இருக்கும் அதிசயத்தை அருள்கிறார்கள். மனுவின் நினைவுக்கு எட்டாத அதிசயங்களும், கற்பக தவ ரகசியங்கள் பற்றியும் மெய்வழி ஆண்டவர்கள் தன்னைச் சார்ந்த அடியவர்களுக்கே அருளியுள்ளார்கள்.

*ஜீவசகோதரர் வெங்கடேச முத்து:* **திருக்கொரல் - அதிகாரம் எண் 8: அன்புடைமை:** மனுக்குல வாழ்வின் மகிழ்ச்சிக்கு மூலாதாரமான அன்பை, **அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே** என வள்ளலார் அருள்கிறார். மனித நேயம் எனும் அன்பு, மன்னிப்பு, தயவு, இரக்கம், தியாகம், காதல், பரிவு, பக்தி, ஈரம் என பல நாமங்களில் வெளிப்படுகிறது. புற உலகப் பற்றுடன் மனதால் நாம் செய்யும் அன்பு அன்பல்ல. பற்றற்ற பெரியோர்களின் மெய்யன்பாகிய அன்பே நம்மை சிவ நிலையில் ஆக்கும். **அன்பில்லாத உள்ளம் மயானம்** என கபீர்தாசரும், **அன்பினில் விளைந்த ஆரமுது** என மாணிக்கவாசக பிரானும் அருள்கிறார்கள்.

*ஜீவசகோதரர் சங்கர்:* தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என எண்ணும் பெரியோர்கள், மனுக்களின் ஜீவ ரட்சிப்பிற்காக அருளும் மெய்யன்பே, **அன்பே சிவம்** என்பதற்கான இலக்கணமாக உள்ளது.

*ஜீவசகோதரர் தியாகராஜன்:* **அழகு அணி சித்தர் பாடல் எண் 20: கண்ணுக்கு மூக்கடியோ காதோர மத்திமத்தில்...** கண், காது, மூக்கு, வாய் இதனுள் தான் சர்வ வேதங்களும் அடக்கம் என மெய்வழி ஆண்டவர்கள் அளியுள்ளார்கள். ஆசான் அருளால் அல்லலுறும் ஒன்பது வாசல் கடந்து பத்தாவது வாசல் அறிந்து பிறவாமை பெறும் ரகசியம் கூறுவதே அழகணி சித்தர் பாடல்.

*ஜீவசகோதரர் கோபி: பரிணாம வளர்ச்சி:* ஐந்து அறிவு ஜீவபேதங்கள் யாவும் தங்களின் இரை, இணை, இருப்பிடத்திற்கான செய்தித் தொடர்பினை ஒலி, மின்காந்த அலை, காட்சி, உணர்வு, மோப்பம் மூலமாகவே அறிந்து கொள்கின்றன. சுவை, ஊறு, ஒளி, ஓசை, நாற்றம் இவற்றின் மூலமே செய்தித் தொடர்பு கொள்ளும் ஆற்றல் உள்ளது என அறியும் அறிவு ஆறறிவு கொண்ட மனு ஒருவனுக்கே உள்ளது.

**தெய்வத் தேடு கூடகம்: வாருங்ஙள் பிறவியரே தடந் நென்றிசை வாருங்ஙள் பிறவியரே...**



Copyright © AMNA Trust, Chennai 

தலை தெற்கு என வள்ளல்பிரான் அருளியபடி தென்னாடாகிய சிரசில் வீற்றிருக்கும் இறை நிலையே தேடுகூடகமாக உள்ளது. பூர்வீக புராதனத்தை நாத ஒலியின் மூலம் அருளி, அறிவு ஒளியாக ஆசான் ஒளிரச் செய்கிறார்கள். தங்களின் **சொன் னயனக்கலை** கொண்டு நரனை மனுவாக்கி பின் தேவனாக்கி மதங்களில் இருந்து விடுவித்து, வித்தில்லா வித்தின் மூலம் பிறவாமையை அருள்கிறார்கள். வற்றாத ஜீவநதியாக, வரமனைத்தும் அருளும் தர்மசத்திரமாக வரும் நிர்க்குணம் கொண்ட அமரர்களே பெரியோர்கள். எண்சாண் உடம்பின் பிரதானமான சிரசின் சிறப்பறியா நரன், நான் எனும் ஆணவத்தால் அறம் மெலிந்ததாக பிரம்மகூடகர்கள் கூறுகிறார்கள். னானிலம் தனிலே னர ஜென்மம் யார் என்பதை ஆசான் அருளால் ஆறாவது அறிவின் ரகசியம் அறிந்த மனுவே அறிய முடியும்.

**குருபிரான் அருளமுதம்:**

சப்தத்தின் மூலம் தேவபிறப்பு உண்டாகும் ரகசியம் அறிந்து அதனை அருளும் வள்ளலைத் தேடி வருபவர்களே தேடுகூடகர்கள் என அருளி தோத்திரப் பாடலுடன் அவை நிறைவுற்றது.

## இசை வகுப்புகள்
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

**04-06-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி...** என்ற தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.
**கண்டு கண்டுனீ விண்ட யாவுமே காணு வாய்முப் பாழென... வித்தையே பிரம்ம வித்தை யீதென வெற்றி வாழ்க்கையி லேறுமே** என்ற மெய்ம்மண ஞானம் பாடல், ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

**18-06-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**அங்கமதிடத்தில் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவு...** என்ற குருமணி மாலை தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.
**பண்டை வேதியர் திங்களூர் வீதிப் பாதை யில்வரக் கண்டனாள்... விண்ட வர்யாரும் கண்டி டாப்பேதை வீண ரென்றிட்ட னாளிதே** என்ற மெய்ம்மண ஞானம் பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப்பெற்று அவை நிறைவுற்றது.

**25-06-2023 ~ ஞாயிற்றுக்கிழமை**

**தத்துவம் கடந்த தயானிதி கடலே...** என்ற குருமணி மாலை பாடலுடன் அவை மலர்ந்தது.
**கண்ண னூரேரிக் கரையி லேனின்று கலங்கி னேன்கா ணாமலே... வாய் திறந்நுமே வாக்மி மார்க்கனன் னாத ரென்றெனைக் கூவினார்** என்ற மெய்ம்மண ஞானம் பாடல் குருநாதரின் வழி காட்டுதலுடன் ராகம், தாளம் மற்றும் உணர்வுடன் பாடுவதற்கான பயிற்சி அளிக்கப் பெற்று அவை இனிதே நிறைவுற்றது.

# குரு வாழ்க ! குருவே துணை !!

*சிவன் கோபித்த காலத்தில் குரு இரக்ஷிப்பவ ராகின்றார். குரு கோபித்த காலத்தில் இரக்ஷிப்பவ ரொருவருமில்லை. ஆதலால் சிவகுருவை யடைந்து அவரையே செவ்வையாக ஆசிரயிக்கவேண்டும்.*

***~ குரு கீதை***



*Copyright © AMNA Trust, Chennai* 

## 2023 ஜூன் மாதம், AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை அளித்தவர்கள்

| | |
|---|---|
| இன்பலதா | பாஸ்கர் |
| மாதவன் | ராமு |
| ஸ்ரீமா | உமாராணி |
| சபிதா | ராஜமகேஷ் |
| வடிவேலன் | பழனிவேல் |
| தனராஜன் | பொன்லக்ஷ்மி |
| ஜெயபிரகாஷ் | கணேசன் |
| செல்லம்மா | கார்த்திகேயன். ஆவடி |
| புன்னகை | மகேஷ். மதுரை |
| சித்ரா மோகன் | பாலா. காஞ்சிபுரம் |

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: **Aathi Margha Neethi Avai**
Account Number: **50200047470073**
IFSC: **HDFC0000323**
Branch: **Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

***www.amnatrust.org***

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

*Twitter Page: https://twitter.com/TrustAmna*

*Instagram: https://www.instagram.com/amnatrust*

***பின்குறிப்பு**: இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 24 - Month: July 2023*